**தலைப்பு – 105 - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி I - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி II - ஒவ்வொரு தலைப்பு ிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் |
| 294 | தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் |
| 305 | மலையக சிறுபயிர்ச்செய்கை புனரமைப்புத் திணைக்களம் |
| 322 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 107,509,495,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில்

ரூபா 93,823,266,007 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளுக்கான தேறிய சேமிப்பு ரூபா 2,471,524 தொகைக்கும் ரூபா 12,866,453,529 தொகைக்கும் இடையிலான வீச்சில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 1.35 சதவீதத்திற்கும் 67.63 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழு பவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 9,906,377,000 | 85,005,363,000 | 9,846,613,355 | 72,198,673,116 | 59,763,645 | 12,806,689,884 |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 11,093,350,000 | 38,400,000 | 10,978,819,076 | 2,843,781 | 114,530,924 | 35,556,219 |
| 294 | தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களம் | 150,110,000 | 763,425,000 | 146,152,258 | 149,515,831 | 3,957,742 | 613,909,169 |
| 305 | மலையக சிறுபயிர்ச்செய் கை புனரமைப்புத் திணைக்களம | 16,115,000 | 1,225,000 | 13,912,950 | 955,526 | 2,202,050 | 269,474 |
| 322 | தேசிய தாவரவியல் பூங்ககாக்கள் திணைக்களம் | 174,880,000 | 360,250,000 | 174,316,716 | 311,463,398 | 563,284 | 48,786,602 |
| | மொத்தம் | 21,340,832,000 | 86,168,663,000 | 21,159,814,355 | 72,663,451,652 | 181,017,645 | 13,505,211,348 |

**(ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு கீழே காண்பிக்கப்பட்டவாறு ரூபா 45,457,667,395 தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஏற்பாடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கமநெகும | 13,478,000,000 | 12,955,247,074 | 522,752,926 |
| சிறு நீர்ப்பாசன மறுசீரமைப்பு | 800,000,000 | 584,558,668 | 215,441,332 |
| கிராமிய பிரதேசங்களில் முன்பள்ளி மேம்பாட்டிற்கான பிரசித்தப்படுத்தல் | 400,000,000 | 255,609,907 | 144,390,093 |
| வடக்கின் வசந்தம் | 532,000,000 | 302,899,830 | 229,100,170 |
| கிழக்கின் உதயம் | 472,000,000 | 171,094,989 | 300,905,011 |
| சபரகமுவ அருணலோகய | 2,048,000,000 | 1,841,068,646 | 206,931,354 |
| ரஜரட்ட நவோதய | 2,110,000,000 | 1,986,357,983 | 123,642,017 |
| கந்துரட்ட உதானய | 1,567,000,000 | 969,725,516 | 597,274,484 |
| வயம்ப புபுதமு | 1,693,000,000 | 1,643,669,645 | 49,330,355 |
| புபுதமு வெல்லஸ்ஸ | 2,100,000,000 | 1,984,508,681 | 115,491,319 |
| படகிர ரண் அருண | 2,952,000,000 | 2,831,084,183 | 120,915,817 |
| உருகுணு உதானய | 2,309,000,000 | 2,007,913,230 | 301,086,770 |
| வளர்ந்து வரும் வலய நடவடிக்கைகள் | 14,996,667,395 | 12,657,972,221 | 2,338,695,174 |
| கூட்டுத்தொகை | 45,457,667,395 | 40,191,710,573 | 5,265,956,822 |

**(ஈ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக வேறு அமைச்சுக்களினாலும் காரியாலயங்களினாலும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு பின்வருமாறு ரூபா 22,225,000 தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஏற்பாடுகள் வழங்கிய அமைச்சு/ காரியாலயம் | வழங்கிய ஏற்பாடுகள் | பயன்பாடு | 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வெகு சன ஊடக மற்றும் தகவல்கள் அமைச்சு | 750,000 | 742,632 | 7,368 |
| சனாதிபதி செயலகம் | 13,300,000 | 12,853,302 | 446,698 |
| பிரதமர் காரியாலயம் | 5,000,000 | 4,986,896 | 13,104 |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 3,175,000 | 3,174,691 | 309 |
| | 22,225,000 | 21,757,521 | 467,479 |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது 20.30.02.19 வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 300,000,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 373,171,029 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 124 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கீழே காட்டப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறாகும்.

| | | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| தலைப்பு | விடய இல. | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 105 | 10501 | 120,000,000 | 102,074,263 | 60,000,000 | 89,332,492 | 438,000,000 | 283,436,868 |
| 218 | 21801 | 12,000,000 | 9,777,871 | 9,000,000 | 11,222,942 | 90,000,000 | 51,948,767 |
| 294 | 29401 | 18,500,000 | 9,829,119 | 8,000,000 | 13,530,752 | 56,000,000 | 42,488,310 |
| 305 | 30501 | 2,200,000 | 1,311,225 | 800,000 | 1,415,178 | 8,000,000 | 5,630,991 |
| 322 | 32201 | 20,000,000 | 14,330,346 | 8,500,000 | 12,652,989 | 60,000,000 | 47,709,865 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 188,349,927 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| **அமைச்சு / திணைக்களம்** | **கணக்குகள் இல.** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
| --- | --- | --- |
| | | **ரூபா** |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0019/000 | 92,383,062 |
| சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 6000/0000/00/0015/0099/000 | 5,879,061 |
| தேசிய மிருகக் காட்சிச்சாலைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0149/000 | 80,085,161 |
| மலையக சிறுபயிர்ச்செய்கை புனரமைப்புத் திணைக்களம | 6000/0000/00/0015/0160/000 | 2,300,593 |
| தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0167/000 | 7,702,050 |
| | மொத்தம் | 188,349,927 |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 105 – பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்டோபர் 09 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 மீண்டெழும் செலவின விடயங்களும் 12 மூலதனச் செலவின விடயங்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,941,960,000 தொகையான ஏற்பாடு முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 08 மீண்டெழும் செலவின விடயங்களும் 12 மூலதனச் செலவின விடயங்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 53,410,950,000 தொகையான மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையால் ரூபா 50,972,347,215 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 2,438,602,785 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(iii) 04 மீண்டெழும் செலவின விடயங்களும் 04 மூலதனச் செலவின விடயங்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,158,800,000 தொகையான ஏற்பாட்டில் நிதிப் பிரமாணம் 66 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 2,177,800,000 அதாவது 42.22 சதவீதம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்பும்

அச் செலவின விடயங்களிலிருந்து ரூபா 2,086,819,706 தொகை அதாவது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் 40.45 சதவீத ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டிற்காக அமைச்சால் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 1,934,500,000 தொகையான ஏற்பாடு மெற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் ஏற்பாட்டில் 1.76 சதவீதம் அதாவது ரூபா 34,117,372 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. திறைசேரியிலிருந்து கட்டுநிதி பெறப்படாமையால் இச் சேமிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சுச் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(v) விசேட நிதியத்தால் நிதியீட்டப்பட்ட 04 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் ரூபா 17,010,176 தொகையான ஏற்பாடு வேறு செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் ரூபா 984,488 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 16,025,688 அதாவது 94.2 சதவீம் எதிர்பார்த்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பொதுத் திறைசேரியால் பணக் கட்டுநிதிப் பெறுவனவு வரையறுக்கப்பட்டிருந்தமையால் இவ் மேலதிக ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்ட இலக்கிற்காக பயன்படுத்தப்பட முடியாதிருந்ததாக அமைச்சின் செயலாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 92,383,062 தொகையானதுடன் அம் மீதியில் இரு வருடங்களுக்கு மேற்பட்டுக் காணப்பட்ட ரூபா 37,143,872 ஆன வைப்புகள் தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம் மீதியில் ரூபா 5,716,193 தொகை 2013 நவம்பர் மாதத்தின் போது

அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் சில வைப்புகள் அபிவிருத்திச் செயற்திட்டங்களில் பிடிமானமாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தமை அமைச்சுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10501 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு இரு ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,996,837 தொகையானதுடன் அந் நிலுவை மீதி அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. இதில் ரூபா 1,552,610 தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் ஊழியர் ஒருவர் 2011 நவம்பர் மாதம் முதல் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 93,160 தொகையான கடன் மீதி அறவிடப்படுவது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2008 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் பதவி வறிதானதை அடுத்து காலமாகிய உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 332,331 தொகையான ஆதனக் கடன் மீதி அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. அவ் உத்தியோகத்தர் இறக்கும் போதும் சேவையிலிருந்து வறிதாக்கப்பட்ட கட்டளை

வழங்கப்பட்டிருந்தமையால் மரணப் பணிக்கொடை உரித்தாகியிருக்கவில்லை. அக் கடன் தொகைக்கு உரித்தான இரத்துச் செய்யப்பட முடியாத அட்டோனிப் பத்திரமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அக் கடன் மீதி அறவிடப்படுவதற்காக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) கண்டி மாவட்ட திட்டமிடல் அலுவலகத்தில் சேவையில் இருந்து வேலை நீக்கத்திற்கு உள்ளான ஓர் உத்தியோகத்தர் தொடர்பான ஒழுக்காற்று பரிசீலனைக் குழு அறிக்கையின் படி ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் உத்தியோகத்தரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 64,314 தொகையான கடன் மீதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பிணையாளிகளிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2001 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு லீவைப் பெற்று லீவின் பின்னர் மீள சேவைக்கு வருகை தந்திராத இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,076,581 தொகை இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒரு உத்தியோகத்தரின் ஆதனக் கடன் கோவை காணாமற் போயிருந்ததுடன் கடன் தொகை மீளச் செலுத்தப்பட்டிராமையால் அவ் உத்தியோகத்தரின் பெயர் கறுப்புப் பட்டியலிற்கு உள்ளடக்கப்படுவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

- ஏனைய உத்தியோகத்தரின் கடன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களுக்கு உரித்தான உறுதி அரசாங்கத்தின் பெயரிற்கு மாற்றிக்கொள்வதற்கு தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11:9 ஆம் பிரிவின் பிரகாரம் கடன்

அங்கீகரித்த அதிகாரியால் தவறப்பட்டிருந்தது. 2013 யூலை 31 ஆம் திகதி வரையிலும் அவ் ஆதனத்தில் அட்டோனிப் பத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கின் கீழ் வழங்கப்படும் கடன் முற்பணம் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மாத்திரமே வழங்கப்பட வேண்டிய போதிலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்கள் இரண்டாலும் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது சில உத்தியோகத்தர்களுக்கு வட்டி இல்லாத இரு ஆண்டுகளுக்கான விசேட சம்பளக் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2011 ஒக்டோபர் 20 ஆம் திகதிய பீடீ/ஜீபீஎஸ்/ஏஏ/2001/எஸ் ஆம் இலக்க தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி இவ்வாறு வட்டியல்லாத இரண்டு ஆண்டுகளுக்கான சம்பளக் கடன் தொகை வழங்கப்படலாகாதென்றும் அவ்வாறு கடன் வழங்கப்பட்டிருப்பின் அது ஏனைய சகல அரசாங்க சேவை ஊழியர்களுக்கும் முன்மாதிரியாகும் எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்திருந்த போதிலும் அவ் அறிவிப்பை அடுத்தும் அம் மாவட்ட திட்டப் பணிப்பாளர்களால் இக் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அரசாங்கக் கடன் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மீறப்படுவது மற்றும் பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தல்கள் கருத்திற்கொள்ளப்படாது செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் செலுத்தப்பட்ட கடன் தொகையும் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செலுத்தப்பட்ட கடன் தொகையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 4,075,159 ஆகக் காணப்பட்டது.

(vii) அமைச்சின் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் பதவி வகுத்த ஓர் உத்தியோகத்தர் இரண்டாம் நிலை அடிப்படையில் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் ஒன்றில் கடமையாற்றியிருந்ததுடன் அச் சேவைக் காலம் பூர்த்தியடைந்ததை அடுத்து 2012 திசெம்பர் 31 வரையிலும் மீள கடமைக்கு வருகை தந்திருக்கவில்லை. அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,266 தொகையான கடன் மீதியையும் உரிய வட்டித் தொகையையும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும் விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2013 யூலை 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வேறான கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படாததுடன் நிதி அமைச்சின் மூலம் தயாரிக்கப்பட்ட இடைக்கால முதலீட்டுத் திட்டம்/ மஹிந்த சிந்தனை அபிவிருத்தி கொள்கைக் கட்டமைப்பின் கீழ் குறிப்பாக நிதியாண்டிலும் அடுத்துவரும் இரு நிதியாண்டுகளுக்காக உரிய அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கீழ் மதிப்பிடப்பட்டு இதன் பிரகாரம் வருடாந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதாக அமைச்சுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட 1.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதனை அடுத்து அமைச்சால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும்

மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படாது தயாரிக்கப்பட்டிருந்தது. 2014 – 2016 காலப்பகுதியின் போது மஹிந்த சிந்தனை தூர நோக்கின் கீழ் நிதி அமைச்சு தயாரித்த அரச முதலீட்டு உபாயமார்க்க திட்டம், கூட்டிணைந்த திட்டமாகக் கருதப்பட்டு இதன் கீழ் உள்ள நோக்கங்களை வெற்றிகொள்வதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் இது மேலும் நடைமுறைக்கும் உயரிய நடைமுறையாகவும் இவ் அமைச்சு இனங்கண்டுள்ளதாகவும் அமைச்சுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| உபகரணம் | அலகின் அளவு | சொத்துக்கள் உள்ள இடம் | விளைவற்றது/ குறைவான பயன்பாடுடையது |
|---|---|---|---|
| கமரா | 1 | கேகாலை, இரம்புக்கன பிரதேச செயலகம் | குறைவான பயன்பாடுடையது |
| கெசட் இயந்திரம் | 1 | கேகாலை, இரம்புக்கன பிரதேச செயலகம் | விளைவற்றது |
| விளையாட்டு உபகரணங்கள் | 232 | மாத்தளை, யட்டவத்த பிரதேச செயலகம் | குறைவான பயன்பாடுடையது |
| ஆரம்பப் பள்ளி உபகரணங்கள் | | கண்டி, உடுநுவர பிரதேச செயலகம் | குறைவான பயன்பாடுடையது |
| கையுடனான குஷன் கதிரைகள் | 21 | கண்டி, உட பலாத்த பிரதேச செயலகப் பிரிவு | குறைவான பயன்பாடுடையது |
| உருக்கு அலுமாரிகள் | 04 | கண்டி, உட பலாத்த பிரதேச செயலகப் பிரிவு | குறைவான பயன்பாடுடையது |
| எல்சீடீ தொலைக்காட்சி | 02 | கண்டி, அகுரணை பிரதேச செயலகப் பிரிவு | குறைவான பயன்பாடுடையது |
| டீவீடீ இயந்திரங்கள் | 02 | கண்டி, அகுரணை பிரதேச செயலகப் பிரிவு | குறைவான பயன்பாடுடையது |

**(ஆ) அரசாங்க வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சால் செயற்படுத்தப்படும் வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்படுவதற்காக தேவையான இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்காக 2011 யூன் 09 ஆம் திகதிய அமப/11/1236/519/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் China National Aero-Technology Import and Export Corporation நிறுவனத்தால் ஐக்கிய அமெரிக்க டொலர் 115,853,892.69 இற்கு 725 இயந்திர உபகரணங்கள் கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் இவ் வெளிநாட்டு உதவிக் கடன் (உபகரணக் கடன்) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு வளத் திணைக்களத்தால் மேலும் இலங்கைக்கு சாதமாகக் கூடிய வகையில் China National Aero-Technology Import and Export Corporation நிறுவனத்துடன் அவர்களது விலை மனு தொடர்பான நிபந்தனைகள் கலந்துரையாடப்படுவதற்கும் நிதி திட்டமிடல் அமைச்சுச் செயலாளர் அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத முற்பணம் அக் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரே செலுத்தப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையின் செல்லுபடித் தன்மை அவ் உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் உறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

(iii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது இவ் இயந்திர உபகரணக் கடனுக்காக கடன் தவணைப்பணமாக முறையே

ரூபா 1,190 மில்லியன் தொகையும் ரூபா 1,850 மில்லியன் தொகையுமாக ரூபா 3,040 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. அச் செலவினம் 3001 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாது 2502 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறே அக் கடனுக்காக 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 453 மில்லியன் தொகையான வட்டி 1602 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாது 2502 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) அமைச்சால் பெறப்பட்டிருந்த ரூபா 14,504,000,000 பெறுமதியான அவ் இயந்திர உபகரணங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

| | சொத்து வகை | அலகுககளின் எண்ணிக்கை | சொத்துக்களை வழங்கிய நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | ---------------- | ------- | -------------------------------- | ------------ | ----------- |
| | | | | ரூபா மில்லியன் | |
| i. | பொறிகள் | 49 | • அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 14,504 | 2011 நவம்பர் முதல் |
| ii. | இயந்திரஉபகரண ங்கள் | 676 | • மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் | | |
| iii. | பொறிகளுக்கான உதிரிப் பாகங்கள் | | • அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | | |
| | | | • வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| | | | • மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| | | | • தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| | | | • கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | | |
| | | | • இலங்கை இராணுவம் | | |
| | | ----- | | --------- | |
| | | 725 | | 14,504 | |
| | | === | | ====== | |

## 1.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுத் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| நிதிப் பிரமாணம் 703(2)(ஆ) | 2,746,405 | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அவ் அமைப்பால் வேறு நபர்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| (i) 2010 மே 24 ஆம் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.7 ஆம் பந்தி | 109,020 | கௌரவ அமைச்சரின் தனிப்பட்ட பதவியணிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படிப்பணத்திற்கு மேலதிகமாக மூன்று உத்தியோகத்தர்களின் பட்டியல்கள் மீளளிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2007 செப்தெம்பர் 11 ஆம் திகதிய 21/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.7 ஆம் பந்தி | - | 2012 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்ட 48 உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு உரித்தான தகவல்கள் மற்றும் அவர்களால் உரிய சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைப் பிரதியுடன் அமைச்சுச் செயலாளரால் உத்தியோகத்தருக்கு உரித்தான சேவைக்கு உரித்தான நிருவாக அதிகாரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |

**(இ) முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கை | | காண்பிக்கப்பட்ட தகைமைகளிற்கு மாறான தகைமைகளிற்கு CARE செயற்திட்டச் செயற்பாட்டு அலுவலகத்திற்காக 04 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |

**(ஈ) ஏனைய சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2012 யூலை 10 ஆம் திகதிய 2/2012 ஆம் இலக்க திவிநெகும சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தி | 1,019,875 | திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் நாற்றுக்கள் வழங்கப்படுகையில் இதற்காக நலன்பெறுனருக்கு வழங்கப்படும் நாற்றுக்களுக்கான பதிவேடு, உதவியாளர்களாகச் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் நாற்றுக்கள் மற்றும் நடுகைப் பொருட்களைப் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்படுவதற்கான அறிக்கைப் புத்தகம், நலன்பெறுனர்கள் பயிரினங்களைப் பெற்றமையை உறுதிப்படுத்தும் கையொப்பப் பதிவேடு ஒன்றைப் பேணுதல் மற்றும் நாற்றுமேடைகளில் உள்ள நாற்றுக்களின் தரத்தை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் பதுளை பிரதேச செயலகப் பிரிவில் 2012 ஆம் ஆண்டின் போது அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 1,019,875 பெறுமதியான நாற்றுக்கள் தொடர்பாக மேற்குறித்த ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டத்தின் 6(1)(அ)உப பிரிவு | 24,873,873 | ரன் அருண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கம்பஹா ஒருதொட தேகப் பயிற்சிக்காக நடக்கும் நடைபாதை செயற்திட்டத்திற்கு உரித்தான ரூபா 24,873,873 பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் தொடர்பாக இரு ஒப்பந்தக்காரர்கள் பொது ஒப்பந்தப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டிராததுடன் ஒப்பந்தம் வழங்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்ட செயற்படுத்தலிலான நலிவுகள்

செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்

திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தின் மதுகம பிரதேச செயலகப் பிரிவில் வீட்டுக் கைத்தொழில் தாபிக்கப்படுவதற்காக ஆடைகள் உற்பத்திக் கைத்தொழிலுக்கு ரூபா 570,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆடைகள் உற்பத்திக் கைத்தொழிலுக்காகப் பெறப்பட்ட ஏற்பாடுகள் எதுவும் பயன்படுத்தப்பட்டிராததுடன் கீழே காண்பிக்கப்பட்ட காரணங்களால் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

(i) ஆடைகள் உற்பத்திக்காக ஒரு நலன்பெறுனருக்கு வழங்கப்பட்ட ஆகக் கூடிய தொகை ரூபா 10,000 ஆனமையால் உபகரணங்களின் விலை ரூபா 10,000 ஐ விட அதிகரிக்கையில் தேவைப்படும் மிகுதித் தொகையை வழங்குவதற்கு நலன்பெறுனர்களுக்கு இயலுமை இருக்கவில்லை.

(ii) பிராந்திய கொள்வனவுக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட விலைகளைப் பார்க்கிலும் குறைவான விலைக்கு ஏனைய நிறுவனங்களிடமிருந்து அப் பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படுவதற்கான இயலுமை காணப்பட்டது.

**(ஆ) செயற்திட்டம் மேற்கொள்ளப்படுவதிலான தாமதம்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| பதுளை மாவட்டத்தின் புதிய கிராம வீதியை கொங்கிரீட் இடல் | 500,000 | 2012.09.18 | 2012.06.20 | 300,000 | பொருள் கொண்டு செல்லலிலான சிரமம் |
| கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேச செயலகப் பிரிவில் கொரயா வங்குவ வெலிகந்த வீதியின் பக்கச் சுவர் மற்றும் வீதி கொங்கிரீட் இடல் | 500,000 | 2012.08.10 | 2012.10.10 | செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மாவட்டப் பொறியியலாளரினால் கள ஆய்வின் போது சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் முற்றாக மேற்கொள்ளப்பட்டிராமையால் சுவர் முற்றாகக் கழன்று வீதியில் வீழ்ந்திருந்தது. |

**(இ) பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான நலன் பெறப்பட்டிராத செயற்திட்டங்கள்**

கீழே குறிப்பிடப்பட்டவாறு நிர்மாணிப்பிற்காக பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்பணியின் முன்னேற்றம் இல்லாதிருந்த சந்தர்ப்பங்கள் சில அவதானிக்கப்பட்டன.

(i) 2012 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேசச் செயலகப் பிரிவின் பண்டாரவத்த – மிரிஸ்வத்தை வீதிக்கு ரூபா 709,936 தொகையான செலவில் கொங்கிரீட் பக்கக் கால்வாய்கள் நிர்மாணிக்கப்படுகையில் அவை அங்காங்கே பகுதியளவில்

குறித்த பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை வீடுகளில் நுழைவாயில் பகுதியில் உறுதியளிக்கப்பட்ட வகையில் குடியிருப்பாளர்களால் ஹியூம் குழாய்கள் பொருத்தப்பட்டிராமையால் படிப்படியாக நீர் வழிந்தோடியிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் இம்புல் கொட – கனேமுல்ல வீதிக்கு ரூபா 779,508 தொகையான செலவில் கொங்கிரீட் கால்வாய்கள் அமைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியாவதற்கு முன்னர் அவற்றின் பராமரிப்பு நலிவான நிலையில் காணப்பட்டமையால் அயலில் உள்ள மரங்கள் வீழ்ந்து கால்வாய்களிலும் மதகுகளிலும் மண் நிரம்பியமையால் முறைப்படி நீர் வழிந்தோடியிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் கஸகஹவத்த - இஹலகம வீதியில் ரூபா 629,315 தொகையான செலவில் அமைக்கப்பட்ட கொங்கிரீட் பக்கக் கால்வாய் முடிவுறும் பகுதியின் காணி உரிமையாளரால் கால்வாய் தடுக்கப்படும் வகையில் பாரிய கல் ஒன்றால் அடைக்கப்பட்டிருந்தமையால் சேரும் நீர் வழிந்தோடுவது தடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக செலவிடப்பட்ட தொகையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எய்தப்பட்டிருக்கவில்லை.

(iv) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் பதுளை பிரதேச செயலகப் பிரிவில் ஒரு கிராம சேவகர் பிரிவில் 17 குடும்பங்களுக்காக 170 வீட்டுக் கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு கோழிக்கூடுகளுக்கான மானியமாக ரூபா 108,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இவற்றில் 36 குஞ்சுகள் சிறுபராயத்திலேயே மரணித்திருந்ததுடன் 74 குஞ்சுகள் பொருளாதார நெருக்கடி காரணமாக பேணுவதற்கு முடியாது நலன்பெறுனர்களால் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(v) மாத்தளை மாவட்டத்தின் நாஉல பிரதேச சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகள் தொடர்பாக கீழே காண்பிக்கப்பட்ட ஒப்பந்த நிர்வாக நலிவுகள் கண்டறியப்பட்டன.

- 2012 கமநெகும செயற்திட்டத்தின் கீழ் நாஉல கனுமுலயாய உப வீதி மற்றும் பிலிஹுடுகொல்ல இஹல பத்தல வத்த வீதியை கொங்கிறீட் இடல் கைத்தொழிலிற்காக ரூபா 1,960,000 தொகைக்கு இரு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு அம் முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. வீதியின் இரு மருங்கிலும் ¾'' கற்கள் தோன்றி கழன்று செல்லும் நிலை ஏற்பட்டதுடன் கொங்கிரீட் கலவை மதிப்பிடப்பட்ட தரத்தில் இல்லாதிருந்தமை கொங்கிரீட் இடப்பட்ட வீதியின் சில பகுதிகள் உடைத்து பரிசீலிக்கையில் அவதானிக்கப்பட்டது. பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிராத வீதிக்கு ரூபா 6,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2012 கமநெகும ''ஒரு கிராமத்திற்கு ஓர் வேலை'' நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் பிலிகுடுகொல்ல பஹல ஹபுகஹகந்த வீதிக்கு கொங்கரீட் இடும் கைத்தொழிலுக்காக ரூபா 980,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் 1:2:4 (3/4'') கொங்கிரீட் கலவைக்காக ¾'' கற்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ¾", 1", 1½" அளவிலான கற்களும் கற்துகள் கலவையுடன் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் வீதியின் இருமருங்கிலும் கொங்கிரீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த கற்கள் கையால் கழற்றக்கூடிய மட்டத்தில் நலிவான நிலையில் காணப்பட்டன.

- 2012 கமநெகும ''ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை'' நிகழ்ச்சித்திட்டங்களின் ஏற்பாட்டின் கீழ் மொறகஹமட முன் பள்ளிக் கட்டிட நிர்மாணிப்புக் கைத்தொழிலுக்காக

ரூபா 961,982 செலவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரை உரிய தரத்தில் அல்லாது மரப்பட்டையுடன் மரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அம் மரம் பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்டிருந்ததுடன் சில பகுதிகள் உக்கலுக்கு உட்பட்டிருந்தது. இதற்காக ரூபா 185,568 தொகை செலவிடப்பட்டிருந்தது.

- 2012 கமநெகும "ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை" நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் மில்லகஹமுல தென்ன மற்றும் கொன்கஹவெல பல்நோக்கு கட்டிட நிர்மாணப் பணிக்காக ரூபா 1,960,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒரு கட்டிடம் களுகங்கை திட்ட முறைமைக்கு எல்லையான வனாந்திரப் பகுதியில் முறையான அங்கீகாரமும் சாத்தியவளக் கற்கையும் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக் கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்த மரமும் பொருத்தப்பட்ட உபகரணங்களும் மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டுள்ள நியமத்திற்கு இணங்கியிராததுடன் அவை பரீட்சிக்கப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) பண்டங்கள் மற்றும் சேவை வழங்கல் இன்றி பணம் விடுவிக்கப்பட்டமை

---

2012 கமநெகும "ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை" நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் நாவுல பிரதேச சபையின் மூலம் செயற்படுத்தப்படும் சேனாகம பல் செயற்பாட்டு கட்டிட நிர்மாணிப்புப் பணி பூர்த்தி செய்யப்பட்டு இதற்காக ரூபா 965,398 தொகை செலவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரைக்கும் கதவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருந்த பட்டையுடனான மரம், வெடிப்பு மற்றும் உக்கலுக்கு உட்பட்டு முறையான பூர்த்தியும் முறையான தரத்தில் இன்றிக் காணப்பட்டன. 40 மி.மி. X 40 மி.மி. X 5 மி.மி. அளவிலான கோண இரும்புப் பட்டியுடனான சதுர வலை அமைக்கப்படுவதற்காக மதிப்பிடப்பட்டு 35 மி.மி.X35மி.மி.X4 மி.மி. அளவிற்காக கொடுப்பனவுகள்

மேற்கொள்ளப்பட்டிருந்தன. தேவைப்பாடின்றி குறுங்கற்கள் பயன்படுத்தப்பட்டு கட்டிடத்தின் சுற்றுச்சூழல் அமைக்கப்படுவதற்காக ரூபா 7,358 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்குறுங்கற்கள் கழுவிச் செல்லப்பட்டு வெறுமனே காணப்பட்டன. இவ்வாறு தரத்தில் அல்லாது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகளுக்காக ரூபா 250,868 செலுத்தப்பட்டிருந்தது.

## 1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

திவிநெகும மீன்பிடி பின் அறுவடை தொழிநுட்ப செயற்திட்டக் கடன் தீர்மான முறையின் கீழ் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்காக தொழிநுட்பப் பயிற்சி பெற்ற 2,675 நலன்பெறுனர்களுக்காக ஒரு நலன்பெறுனருக்கு ஆகக் கூடியது ரூபா 10,000 படியான கடன் வழங்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 26,750,000 தொகை கடற்றொழில், நீர்வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந் நிதியத்திற்கு சுழற்சிக் கடன் நிதியமாக செயற்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களம், இலங்கை வங்கியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2013 சனவரி 31 வரை வங்கியால் நலன்பெறுனர்களுக்காக ஏற்பாட்டுத் தொகையில் 35 சதவீதம் அதாவது ரூபா 9,250,000 தொகை மாத்திரம் கடனாக வழங்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 வரையிலும் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 26,750,000 தொகையான மொத்த ஏற்பாடும் அமைச்சால் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டு ஒதுக்கீட்டுக் கணக்கிலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரை 1,674 நலன்பெறுனர்களுக்காக ரூபா 16,740,000 தொகையான கடன் உதவி வழங்கி எஞ்சிய ரூபா 10,010,000 மீள மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அச் செலவினத்தை மேற்கொள்ளாது ரூபா 10 மில்லியன் மீள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு தருவிப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற தன்மையிலானவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விலகல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கண்டி மாவட்டத்தின் பிரதேசச் செயலகப் பிரிவுகளில் அமைச்சின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி இலங்கை சமுர்த்தி அதிகாரசபையால் நாற்று மேடைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தியிருந்தது. இதற்காக அமைச்சால் ரூபா 19,088,361 தொகையான ஏற்பாடு இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந் நாற்று மேடைக்காக மரக்கறி மற்றும் பழப் பயிர்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டியின் 6.2.3 இன் பிரகாரம் கேள்வி அறிவிப்பின் பிரகாரம் மனுக்கோரல் இறுதித் திகதியான 2012 ஒக்டோபர் 12 ஆம் திகதியின் பின்னர் பெறப்படும் மனு நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திகதியின் பின்னர் அதாவது 2012 ஒக்டோபர் 19 ஆம் திகதி நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

- அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டியின் 6.3.3 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம், கேள்வி அறிவிப்பின் பிரகாரம் மனுக்கள் நிறைவேற்றப்பட்டதை அடுத்து கூடிய விரைவில் கேள்விதாரர்கள் அல்லது வருகை தர விருப்பமான அவர்களது பிரமுகர்களின் முன்னால் மனுக்களைத் திறக்க வேண்டிய போதிலும் 2012 ஒக்டோபர் 12 ஆம்

திகதி மூடப்பட்ட மனுக்கள் 09 நாட் தாமதத்தை அடுத்து 2012 ஒக்டோபர் 21 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது.

- அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டியின் 2.14.1 இன் பிரகாரம், பிரதேச கொள்வனவுக் குழுவிற்கு விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்யப்படக் கூடிய ஆகக் கூடிய பெறுமதி ரூபா 500,000 ஆன போதிலும் அவ் எல்லை மீறப்பட்டு பிபில பிரதேச செயலகத்தால் ரூபா 1,634,885 பெறுமதியான பழப் பயிர்களும் படல்கும்புர பிரதேச செயலகத்தால் ரூபா 5,002,000 பெறுமதியான மரக்கறிப் பயிர்களும் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மாத்தறை மாவட்டச் செயலகத்தால் ரூபா 2 மில்லியனிற்கு மேற்பட்ட 17 தாய்நல மருத்துவ நிலையங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக 17 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் 5 சதவீதத்திற்குக் குறைவற்ற தொகைக்கு செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகத்தால் அந்த 17 ஒப்பந்தங்களுக்காக அவ்வாறு பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) அம்பலந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் செயற்பட்ட கிரிமெட்டியாவ உஸ்ஸான நீர் திட்டத்திற்கு நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக கிலோட்டா வகையிலான 3´ Type 6000 pvc குழாய் ரூபா 4,500 படி மதிப்பிடப்பட்டு அவ் ஒப்பந்தம் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. கிலோட்டா வகையிலான 3´ Type 6000 pvc குழாய்களின் சந்தை விலை ரூபா 2,600 ஆகக் காணப்பட்டது. அச் சங்கத்தால் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் அப் pvc குழாய்களின் சந்தை விலை தொடர்பாக கவனம்

கோரப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 116,533 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2009 இன் 65 ஆம் இலக்க வனப் பாதுகாப்பு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 451 அதிகாரத்தின் 2.1 (ஐ) உப பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தான காணிகளின் வீதிகள் மற்றும் மண் வெட்டும் போது அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தான பாதுகாப்பு வனத்தில் உள்ள ‘‘கால்கன்ன கல்கஹ அங்க கும்புர’’ வீதி ஏறத்தாழ 558 கன மீற்றர் அளவிலான மண்ணை வெட்டி அகற்றி வீதி கொங்கிரீட் இடப்படுவதற்காக ஒப்பந்தக்காரரால் முன்னங்கீகாரம் பெறப்பட்டிராத போதிலும் இதற்காக 2012 யூன் 06 ஆம் திகதி உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,250,420 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) 2011 யூன் 10 ஆம் திகதிய MED/RE/A-SEE/AI/U ஆம் இலக்க அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கைக் கடிதத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பாதுகாப்பு வலைக் கூடார நிர்மாணிப்பின் மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவீத ஆகக் கூடிய தொகை வழங்கல் நலன்பெறுனருக்கு வழங்கப்படுவதற்கு முடியுமானதுடன் எஞ்சிய 50 சதவீதச் செலவினம் அவரது தனிப்பட்ட தொகையிலிருந்து ஏற்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கூடார நிர்மாணிப்பு மதிப்பீட்டுத் தொகை ரூபா 110,770 தொகையானதுடன் அம் மதிப்பீட்டின் படி ஒரு நலன்பெறுனருக்கு வழங்கப்பட வேண்டிய பண வழங்கல் ரூபா 55,385 ஆகக் காணப்பட்டது. எனினும், நலன்பெறுனருக்கு ரூபா 84,000 படி மானியம் வழங்கப்பட்டமையால் ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 28,615 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, கண்டி மாவட்டத்தின் 53 நலன்பெறுனர்களுக்கு ரூபா 28,615 தொகைப் படி ரூபா 1,516,065 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 நட்டங்களும் இழப்புகளும்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது பின்வரும் நட்டங்களும் இழப்புகளும் அவதானிக்கப்பட்டன.

(அ) கமத்தொழில் திணைக்களத்தின் ஒட்டு இரம்புட்டான் செடியின் அங்கீகரிக்கப்பட்ட விலை ரூபா 150 ஆக இருந்ததுடன் மொனறாகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலகத்தால் ஒரு செடி ரூபா 280 படி கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் கொடுப்பனவு செய்யப்படும் போது ரூபா 1,066,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) பெலியத்த பிரதேசச் செயலகப் பிரிவின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பழப் பயிரினங்களைக் கொள்வனவு செய்து பகிர்வதன் மூலம் இஹல பெலிகல்ல கிழக்கு கிராத சேவையாளர் பிரிவின் ஒரு நலன்பெறுனருக்கு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரால் பரிந்துரைக்கப்பட்டிராத 400 பப்பாசிப் பயிர்கள் வழங்கப்பட்டிருந்தன. நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டமையால் பயிர்கள் அனைத்தும் கழற்றி அகற்றப்பட்டிருந்ததுடன் இதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 16,000 தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்ற வகையில் இடம்பெற்றிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) கண்டி மாவட்டத்தின் அக்குரணை பிரதேசச் செயலகப் பிரிவின் விலாத பல்லேகம தாய் மருந்தகம் ரூபா 2,800,980 தொகையைச் செலவிட்டு 2011 திசெம்பர் மாதத்தின் போது திருத்தப்பட்டிருந்த போதிலும் இத் தாய் நல சிகிச்சை நிலையத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிராமையால் 2012 திசெம்பர் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2012 யூன் மாதத்தின் போது கங்கவட்ட கோரல பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அஸ்கிரிய கிழக்கு ஆரம்பப் பள்ளி அபிவிருத்தி ஒப்பந்தத்தின் போது 6 செலவின விடயங்களின் பிரகாரம் மண் நிரப்புதல் மற்றும் சமப்படுத்தலுக்காக 169 m3 இற்காக ரூபா 103,433 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் விடயம் அளவிடப்படுகையில் 100 m3 மேலதிகமாக அளவிடப்பட்டமையால் ரூபா 64,135 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவின் 567 செயற்திட்டங்களிற்காக 2011 செப்தெம்பர் 05 ஆம் திகதிய அமைச்சுச் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படும் உள்ளகச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக பொதுச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 39,706,049 தொகையாகவும் இலாபம் ரூபா 39,706,049 தொகையாகவும் ரூபா 79,412,098 கூட்டுத்தொகையான செயற்திட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் ஏற்பாட்டில் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கம்பஹா ரன்அருண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் செயற்படுத்தப்படுகையில் தனியார் ஒப்பந்தக்காரருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட தினம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்ட தினத்திற்குப் பின்னைய திகதியில் ஒப்பந்த உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை மற்றும் ஒப்பந்தம் வழங்கல் நடைபெற்றிருந்தன.

(iii) முன்னங்கீகாரம் இன்றி உடன்படிக்கையிடப்பட்ட ஒப்பந்தக்காரர் தவிர்ந்த ஏனைய தரப்பினரால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 215(3)(சீ) இன் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 48 சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக மொனறாகலை மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 48,816,717 வழங்கப்பட்டிருந்தது. 2011 யூன் 16 ஆம் திகதிய MED/5/TRE/PD/2010 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கடிதத்தின் மூலம் இச் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டு எஞ்சும் தொகை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தினால் அவ்வாறு எஞ்சிய ரூபா 2,922,974 தொகை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மாத்தறை காளிதாஸ வீதியில் தாய்நல மருத்துவ நிலைய நிர்மாணிப்பிற்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகையில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) மூன்று மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்களில் ஆகக் குறைந்த விலையான ரூபா 6,402,040 தொகையான விலை மனு தேர்ந்தெடுக்கப்படாது இதனிலும் கூடிய ரூபா 7,366,118 தொகையான விலை மனுவை முன்வைத்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரரால் ரூபா 1,504,986 தொகையான மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தக் கிரயம் ரூபா 7,906,946 வரை அதிகரிக்கப்பட்டு நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7,611,014 ஆகக் காணப்பட்டது. ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 295,935 தொகையால் மிகைத்தும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பெறுமதிக்கு மேலாக ரூபா 1,504,986 தொகையான மேலதிக மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் பெறப்படாமலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) ஆகக் குறைந்த விலை நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக அம் மனுதாரர்களுக்கு அது வரையில் 05 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்தக்காரரிடம் அது வரையில் மேற்கொள்ளப்படுவதற்கு 04 ஒப்பந்தங்கள் காணப்பட்டதுடன் ஒப்பந்தக்காரரால் இவ் ஒப்பந்தம் 06 மாத தாமதத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) மாத்தறை மாவட்டச் செயலகத்தின் பிரதான பொறியியலாளரின் கண்காணிப்பின் கீழ் ஒப்பந்தத்தின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அம் மதிப்பீடு தவறானதாகையால் மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட நேர்ந்தது.

(ஈ) புத்தளம் மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் அபிவிருத்தித் துறை உதவியாளராகக் கடமையாற்றியவர் 2010 செப்தெம்பர் 29 ஆம் திகதியின் பின்னர் 2011 மார்ச் 30 ஆம் திகதி வரையான 06 மாத காலத்தின் போது 04 நாட்கள் மாத்திரமே கடமைக்குச் சமூகமளித்திருந்த போதிலும் அவருக்கு அக்காலப்பகுதிக்காக ரூபா 174,452 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய இடர் கடன் தவணைப்பணமான ரூபா 76,500 தொகையை அறவிட முடியாதிருந்தது. இதன் படி, அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 250,952 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 செப்தெம்பர் 01 ஆம் திகதிய திவிநெகும – 2011 ஆம் இலக்க மொனறாகலை பிரதி கமநலப் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக நாற்றுக் கொள்வனவு செய்வது தொடர்பிலான ஆலோசனை தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாமையால் பிபில பிரதேச செயலகத்தால் கூடிய விலைக்கு நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 612,252 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.13 மனித வள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 746 | 592 | 154 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 6 | 3 | 3 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 18,127 | 17,100 | 1,027 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 251 | 206 | 45 | - |
| (v) | ஏனைய (அமைய) | - | 15 | - | 15 |
| | மொத்தம் | 19,130 | 17,916 | 1,229 | 15 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 1,229 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உள்ளடக்கப்பட்டிராத மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள ''கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியத்தின்'' கடமையாற்றியதை அடுத்து 2011 ஏப்ரல் 18 ஆம் திகதிய MED/AD/E3/1/12(REii) ஆம் இலக்க அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் மூலம் அமைச்சின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவிற்குத் தற்காலிகமாக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஓர் உத்தியோகத்தர் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான தகைமைகள் இன்றி அமைச்சின் கீழ் செயற்பட்ட பிரச்சனைகளில் பாதிப்பிற்கு உட்பட்ட சந்தர்ப்பங்கள் பொறியியல் உதவியாளர்/ தொழிநுட்ப உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டு 2011 செப்தெம்பர் 15 ஆம் திகதி முதல் 2013 செப்தெம்பர் வரை சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 1,064,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. தலைப்பு 218 – சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 26 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இணக்க கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய வகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இதன் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| **பதிவேட்டு வகை** | **உரிய பிரமாணங்கள்** |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| வைப்புப் பேரேடு | நிதிப் பிரமாணம் 414 |
| பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 754 |

| | |
|---|---|
| வாகனப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 802 மற்றும் 1647 |
| வாகனச் சம்பவக் குறிப்பேடு | நிதிப் பிரமாணம் 1645 (அ), 1647 (அ) மற்றும் 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை |
| பயன்பாட்டு பொருட் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(இ) |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,350,000 தொகையான முழுத் தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 31 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 81,094,154 தொகையானதுடன் இது அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 11 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவைக் கொண்டிருந்தது.

**(இ) பாதீட்டு ஆதாரச் சேவைகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடு**

ஒரு செலவின விடயத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு மேலாக ரூபா 1,000,000,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 46,811,344 தொகை எஞ்சியிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்குகள்**

02 வருடங்களுக்கு மேற்பட்டுக் காணப்பட்ட ரூபா 5,879,061 தொகையான வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 21801 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 841,783 தொகையானதுடன் அத் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 கூட்டுத்திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் அடுத்துவரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டம் ஒன்று திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறித்த 2.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க மற்றும்

2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான வருடாந்த அறிக்கை 2009 ஒக்டோபர் 22 ஆம் திகதியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4.3 உள்ளகக் கணக்காய்வு

சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தல்

2009 யூன் 06 ஆம் திகதிய டீஎம்ஏ – 2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 4 நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

(i) கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 5 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலாக விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ii) சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் மெய்மையாய்வு அறிக்கையின் படி 45 பொருள் வகைக்கு உரித்தான 265 அலகுகளின் மிகையும் 08 பொருள் வகைக்கு உரித்தான 16 அலகுகளின் பற்றாக்குறையும் கண்டறியப்பட்டது. மேலும் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு 10 பொருள் வகைக்கு உரித்தான 510 அலகுகள் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. திணைக்களத்தால் அம் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படுதல்**

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/ 01 ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 மே 29 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 யூலை 13 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| வாகனம் | 01 | தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 1996 முதல் |
| வாகனம் | 03 | சமுர்த்தி அமைச்சு (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு) | பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2002, 2009, மற்றும் 2012 |
| வாகனம் | 02 | இலங்கை சமுர்த்தி அதிகாரசபை | மேற்படி | 2009 முதல் |

**(ஈ) வேறு நிறுவனத்திடமுள்ள சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

வேறு நிறுவனத்திடமிருந்த சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| சொத்து வகை | சொத்துக்கள் உரித்தான நிறுவனம் | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| வாகனம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 02 | பெறுமதி மதிப்பிடப்பட்டிருக் கவில்லை. | 2010 முதல் |
| வாகனம் | இளைஞர் விவகார மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு | 01 | மேற்படி | - |
| வாகனம் | திட்ட அமுலாக்கல் அமைச்சு (தற்போது | 02 | மேற்படி | - |

செயற்பாட்டில் காணப்படாத)

**(உ) உள்ளபடிநிலை உறுதிப்படுத்தப்படாத வாகனங்கள்**

திணைக்களத்திடம் உள்ள 01 வாகனத்தின் உள்ளபடிநிலை தொடர்பான பௌதீக ஆய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) தாபன விதிக் கோவை** | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் 4.6 ஆம் பந்திகள் | 476,020 | பதவி வறிதாக்கப்பட்ட அல்லது வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதி தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பிணையாளிகளிடம் இருந்து அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் | | |
| (i) நி.பி.571(3) | 4,639,112 | கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் உழைக்கப்பட்டிருந்த வருமானத்திலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்கப்பட்ட செலவினம் கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை 2 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்ட போதிலும் அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி.802 மற்றும் 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | பயன்படுத்த முடியாத மற்றும் பழுதுபார்க்கப்படுவதற்காக உள்ள 05 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு தடவையும் சகல வாகனங்களினதும் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தி | 485,878<br>609,509 | 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இடமாற்றலாகிச் சென்ற 06 உத்தியோகத்தர்களின் ரூபா 485,878 தொகையும் இடமாற்றம் கிடைக்கப்பெற்று வந்த 03 உத்தியோகத்தர்களின் ரூபா 609,509 தொகையான கடன் மீதியும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

**2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**சமூகப் பாதுகாப்புப் பிரிவிற்கு பொருட்களை வழங்கல்**

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த, திணைக்களத்தின் செலவினத் தலைப்பிற்கு உரித்தற்ற சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கு காகிதாதிகள் உள்ளடங்கலாக ஏனை பொருட் பதிவுப் பொருட்கள் பாரியளவில் மாதாந்தம் திணைக்களக் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

**2.8 முகாமைத்துவ நலிவுகள்**

நிறுவனத்தின் வாகனம் விபத்திற்குட்பட்டு ஓட்டத்திலிருந்து முற்றாக அகற்றப்பட்டு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் வாகனத்தின் வருமானப் பத்திரம் விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும்** உள்ளபடியான பதவியணியினர்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 44 | 22 | 22 |
| (ii) | மூன்றாம் நிலை | 19 | 15 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 442 | 325 | 117 |
| (iv) | ஆரம்ப நிலை | 98 | 72 | 26 |
| | மொத்தம் | 603 | 434 | 169 |

மீளாய்வாண்டின் இறுதியில் பதவியணியினர் வெற்றிடங்கள் 169 ஐ நிரப்புவதற்கு தவறியிருந்தது.

## 3. தலைப்பு – 294 தேசிய மிருகக் காட்சிச் சாலைகள் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய மிருகக் காட்சிச் சாலைகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்டோபர் 15 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 3.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும்கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே பந்திகள் (அ) இல் இருந்து (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் பின்வரும் 3.4 முதல் 3.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த கூட்டுத்தொகை ரூபா 646,326,345 தொகையானதுடன் அச் செலவினங்களுக்கு உரித்தான சேமிப்புகள் தேறிய ஏற்பாட்டின் 42 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 29401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,445,076 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமாகக் காணப்பட்டது.

(ii) தனியான கடன் மீதிப் பதிவேட்டிற்கும் இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட கடன் மீதிக்கும் இடையே ரூபா 20,505 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டுத்திட்டம் திணைக்களத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 – 2016 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வரைவு கூட்டிணைந்த திட்டம் 2011 நவம்பர் 22 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 வருடாந்த செயற்திறன் அறிக்கை

மேற்குறித்த 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதனை அடுத்து திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 யூலை 07 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், இச் செயற்திறன் அறிக்கை வரைவு கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேற்குறித்த 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயற்திறன் அறிக்கை 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்டிராததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தல்**

2012 ஆம் ஆண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத் தொடர்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

(i) கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்றதும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவிய காலம்** |
|---|---|---|
| கோனபொல பண்ணை | | |
| - சத்சந்த உடுவ | 01 | நீண்ட காலமாக |
| - நீர் தாங்கி – 1000 லீற்றர்கள் | 01 | 01 ஆண்டு |

(ii) 2008 வருடாந்த செயற்திறன் அறிக்கையின் படி, தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையின் நூதனசாலைக் காட்சிக் கூடங்கள் அமைத்தல், சிவிலிங் பொருத்துதல் மற்றும் மின்சார வயர்களை இழுத்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1,565,160 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2010 ஆம் ஆண்டின் போது அக் கட்டிடத்தைக் குளிரூட்டுவதற்கும் சேவையாற்றுவதற்கும் முறையே ரூபா 3,950,592 தொகையும் ரூபா 101,015 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந் நூதனசாலை 2013 நவம்பர் 30 வரையிலும் காட்சியாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. சிவில் அமைக்கப்பட முன்னர் கூரைப் பழுதுபார்த்தல்கள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிராமையால் மழையில் நனைந்து சிவிலில் சேதமாகியிருந்தது. இதன் படி, ரூபா 5,616,767 தொகை செலவிடப்பட்ட இச் செயற்பாடு 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்த்த விளைவை எய்தியிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம்

திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2010 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய நிறுவனத்திடமிருந்த சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

திணைக்களத்தால் கோனபொலவில் உள்ள காணி ஒன்று முறைப்படி கையேற்கப்படாது பண்ணையொன்று நடாத்திச் செல்லப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் உரிமை சட்டரீதியாகக் கையேற்கப்படும் நடவடிக்கை நடைமுறையில் உள்ளதாக பணிப்பாளர் அவரது பதிலில் குறிப்பிட்டிருந்தார்.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 01 ஆண்டிலும் குறைவான காலமாக இயங்கி வரும் திணைக்களத்தால் தீர்க்கப்படாதிருந்த ரூபா 26,416,608 தொகையான பொறுப்புகள் காணப்பட்டன.

**3.6 செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதிலான நலிவுகள்**

செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை

வத்தளை மீன் வளர்ப்பு நிலைய நிர்மாணிப்பிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 100 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட காணி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிராமையால் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடு விளைவற்றதாகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் போதும் இதற்காக ரூபா 35 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவும் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

2104 செலவின விடயம் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புகளின் கீழ் 05 உப விடயங்களுக்கான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் பின்னவல புதிய மிருகக் காட்சிச்சாலை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 240 மில்லியன் தொகையில் ரூபா 172.4 மில்லியன் தொகை எஞ்சியிருந்தது. திட்டமிடப்பட்டவாறு நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்படாமை முன்னைய உசாத்துணைக் கம்பனி மாற்றப்பட்டு புதிய உசாத்துணைக் கம்பனி ஒன்று நியமிக்கப்படுவதற்குத் தாமதமடைந்தமை பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு தாமதமானமையால் இச் சேமிப்புகள் நேர்ந்ததாக மிருகக்காட்சிச்சாலையின் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அம்பாந்தோட்டை சபாரி பூங்காவின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 34.7 மில்லியன் தொகை மாத்திரமே அதாவது 11 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. துணைக்கட்டுநிதி பெறப்படாமை மற்றும் பூங்காவைச் சுற்றி நிர்மாணிக்கப்படுவதற்கிருந்த சுவர் மற்றும் வேலி எவ்வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து இறுதித் தீர்மானத்திற்கு வருகையில் சிக்கல் ஏற்பட்டமை இதற்குக் காரணமாகியிருந்ததாக பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டம் மேற்கொள்வதிலான தாமதங்கள்

பின்வரும் செயற்திட்டங்களை மேற்கொள்வதில் தாமதம் நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | நிறைவேற்றப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| (i) | தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்கள சிற்றுண்டிச் சாலைக் கட்டிட நிர்மாணிப்பு | 29,653,081 | 2011.06.30 | 2011.08.10 | 15,508,881 | அடிப்படை கருத்து மற்றும் திட்ட மாற்றத்திற்கு நேர்ந்தமை |
| (ii) | பின்னவல புதிய மிருகக் காட்சி சாலை மழை நீர் முறைப்படி அகற்றப்படும் முறைமை | 7,400,573 | 2010.05.20 | 2010.11.16 | 4,396,529 | - மேற்படி - |
| (iii) | பின்னவல புதிய மிருகக் காட்சி சாலையின் நில நீர் களஞ்சிய தாங்கி நிர்மாணிப்பு | 82,879,438 | 2008.08.15 | 2010.06.15 | 9,728,004 | ஒப்பந்தக்காரரால் நிர்மாணிப்பு ஒப்படைப்பதிலான தாமதம் |
| (iv) | பின்னவல புதிய மிருகக் காட்சி சாலையின் தேசிய குடிநீர் பகிர்வு முறைமை நிர்மாணிப்பு | 29,831,462 | 2009.11.20 | 2010.03.19 | 5,670,613 | - மேற்படி - |

## (இ) செயற்திட்ட மதிப்பீட்டு மீதிகள் மாற்றம் - வாகொல்ல புதிய மிருகக்காட்சிச் சாலை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறுத்தைகளுக்கான குளங்களின் நிர்மாணிப்பின் போது அம் மதிப்பீட்டுப் பெறுமதியைப் பார்க்கிலும் ரூபா 7,062,393 தொகையான மேலதிக வேலையும் ரூபா 7,862,452 தொகையான வேலைப் பகுதிகள் குறைவாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கான காரணங்களை ஆய்வு செய்த போது

மதியுரைத்தன்மை மதியுரையாளரால் திட்டங்கள் மாற்றங்களின் அடிப்படையில் நிர்மாணிப்புகளின் நிலை மாற்றமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. முதல் ஆலோசகரால் குளத்தின் நிலப்பகுதிக்கு ஜீயோ சின்தடிக் எனும் துணி வகை பயன்படுத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டாவதாக நியமிக்கப்பட்ட மதியுரையாளர்கள் இதற்காக கொங்கிரீட் பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டமை இதற்குக் காரணமாகியிருந்தது.

(ii) சிறுத்தைப் பாதுகாப்பு அரண்களைத் தயாரிக்கப்படுவதற்கு உரிய கிரயம் மதிப்பீட்டில் 25 சதவீதத்தினைப் பார்க்கிலும் கூடிய அளவிற்காக விபரமான மதிப்பீடு தயாரிக்கக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாது இனங்காணப்படாத வேலை (Provincial sum) ஆக உள்ளடக்கி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) குடிநீர் பகிர்ந்தளிப்பு முறைக்கான செயற்பாட்டிற்கு புறம்பாக ரூபா 279,552 தொகையான வேலைப் பகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாடுகளுக்காக உள்ளக வீதி முறைமை நிர்மாணிக்கின் கீழும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் ஒரே செயற்பாட்டிற்கு இரண்டு முறை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) எல்லை மீறப்பட்டு வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு

வாகொல்ல புதிய மிருகக்காட்சிச்சாலையில் சிறுத்தைகளின் அரணை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ரூபா 184,609,701 தொகைக்காக செலுத்தப்படக்கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 36,921,940 தொகையான போதிலும் அவ் எல்லை ரூபா 1,565,198 தொகையை மிகைத்து இதற்காக ரூபா 38,487,138 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) போதுமானளவு மேற்கொள்ளப்பட்டிராத பிரதான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1998 ஆம் ஆண்டின் போது வாகொல்ல புதிய மிருகக் காட்சிச் சாலையை நிர்மாணித்தலுக்காக விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான வாகொல்ல விவசாயப் பண்ணையில் இருந்து 16.45 ஹெக்டேயர் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதில் 4.15 ஹெக்டேயர் காணி 2012 ஆம் ஆண்டின் இறுதியிலும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் இருந்தது. அப் பிரிவில் மேலும் பண்ணைகள் பேணப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ii) கையேற்கப்பட்ட காணிகளுக்காக விவசாயத் திணைக்களத்திற்கு மாற்றுக் காணிகளோ அல்லது ஏற்பாடுகள் வழங்கப்படுவதற்கு திணைக்களம் உடன்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2001 ஆம் ஆண்டின் போது அரசாங்க கொள்கையின் படி, இந் நிர்மாணிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் படி மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இங்கு 104 ஏக்கர் காணி வரை மிருக்கக் காட்சிச் சலையை விஸ்தரிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஏனைய காணிகள் கையேற்கப்படும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) சர்வதேச தரத்திற்கிணங்க பின்னவல புதிய மிருகக்காட்சிச் சாலையை உருவாக்குவது நோக்காக இருந்த போதிலும் உத்தேசிக்கப்பட்ட மொத்த நில அளவான 104 ஏக்கருக்காக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆரம்பத்திட்டமும் விபரமான திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பார்வையாளர்களின் வருகையும் வருமானமும்**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் போதும் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் என்பவற்றை பார்வையிடப்படுவதற்காக வருகை தந்தவர்களின் எண்ணிக்கையும் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானமும் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

**(i) தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை**

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம்** | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம்** |
| | | **ரூபா** | | **ரூபா** |
| உள்நாட்டு | 1,412,062 | 110,039,210 | 1,689,755 | 130,922,050 |
| வெளிநாட்டு | 21,188 | 25,108,000 | 20,446 | 25,178,750 |
| கூட்டுத்தொகை | 1,433,250 | 135,147,210 | 1,710,201 | 156,100,800 |

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு வருகைதந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடனானவற்றுடன் ஒப்பிடுகையில் 742 நபர்களால் அதாவது 3.6 சதவீதத்தால்

அதிகரித்திருந்ததுடன் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 70,750 ஆல் அதாவது 0.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இவ்வாறே உள்நாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் வருமானமும் முறையே 277,693 நபர்களாலும் ரூபா 20,882,840 தொகையாலும் குறைவடைந்திருந்தது.

(ii) பின்னவல யானைகள் சரணாலயம்

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் | வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் |
| | | ரூபா | | ரூபா |
| உள்நாட்டு | 497,157 | 36,083,510 | 463,982 | 34,053,050 |
| வெளிநாட்டு | 266,297 | 455,554,750 | 264,452 | 448,625,000 |
| கூட்டுத்தொகை | 763,454 | 491,638,260 | 728,434 | 482,678,050 |

2012 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 7 சதவீதத்தாலும் 0.7 சதவீதத்தாலும் வருமானம் முறையே 5.9 சதவீதத்தாலும் 1.5 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

## 3.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகல்

கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 இன் பிரகாரம் போட்டி விலைகள் கோரப்படாது தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை சிற்றுண்டிச்சாலைக்காக ரூபா 843,325 தொகை செலவிடப்பட்டு மரப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சிக்கனமின்றி ஏற்படுத்தப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(i) பின்னவல வாகொல்ல நிர்மாணித்துள்ள புதிய மிருகக் காட்சிச்சாலையின் திட்டம் மாற்றப்பட்டமையால் புதிய திட்டத்தின் படி தயாரிக்கையில் பழைய திட்டத்தின் படி தயாரிக்கப்பட்ட அணில்களுக்கான 04 கூடுகளும், குருவிகளுக்கான கூடுகள், Moose deer அரண, ஊருமுவ (Hog deer) ஓநாய் மற்றும் புனுகுப் பூனை போன்ற விலங்குகளுக்கான கூடுகள் உடைத்து எறியப்பட்டிருந்தன. ஆகையால் அக் கூடுகளை தயாரிப்பதற்காக ஏற்கப்பட்ட மூலப்பொருள் கிரயம், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் அந் நிர்மாணிப்புகள் உடைத்து எறியப்பட்டமைக்கான கட்டணமான ரூபா 9,466,569 தொகை விளைவற்ற செலவினமாகக் கண்டறியப்பட்டது.

(ii) தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையின் சிற்றுண்டிச்சாலை நவீன மதிப்பீட்டிற்கு மேலதிகமாக வைபவத்திற்கான மின்விளக்குகள் உள்ளடங்கலாக மின்சார செயற்பாடுகளுக்காக ரூபா 1,967,991 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இரவு வேளையில் விருந்து வைப்பதற்கு இயலுமை அற்ற மிருகக்காட்சிச்சாலையில் விருந்திற்கான மின் விளக்குகள் பொருத்தப்படுவது விளைவற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

(iii) மிருகக்காட்சிச்சாலையின் உள்ளக மின் விநியோக முறைமையின் திட்ட வேறுபாட்டினால் இதற்காக 2010 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 498,770 தொகையான மதியுரைக் கட்டணங்கள் ஆக்கபூவமற்ற செலவினமாகக் காணப்பட்டது.

### 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்னவல யானை சரணாலயத்தின் யானைகளுக்காக தேவையான விலங்கு உணவு வழங்கப்படும் ஒப்பந்தம் 2012 யூலை 31 ஆம் திகதியில் உள்ளவாறு

முடிவடைவதற்கு இருந்ததுடன் மீள ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் கொள்வனவு நடைமுறை 2012 யூன் 27 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இத் தாமதம் காரணமாக புதிய ஒப்பந்தக் காலம் 2012 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2013 ஒக்டோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் அது வரையில் கடந்த ஆண்டு வழங்குனர்களின் ஒப்பந்தக்காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான பெறுமதி உள்ள இவ் ஒப்பந்தம் குறித்த காலத்தின் போது ஏற்ற ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 14 | 11 | - |
| (ii) | மூன்றாம மட்டம் | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 108 | 75 | 33 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 574 | 232 | 342 | - |
| (v) | ஏனையவை (அமையம்/தற்காலிகம் /ஒப்பந்த அடிப்படை) | - | 39 | - | 39 |
| | மொத்தம் | 709 | 361 | 387 | 39 |

மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய 387 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு – 305 – மலையக சிறுபயிர்ச்செய்கை புனரமைப்புத் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 12 ஆந் திகதி திணைக்கள தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இங்கே பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் பின்வரும் 4.4 முதல் 4.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

#### (அ) பாதீட்டு முரண்

06 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்கு உரிய தேறிய ஏற்பாட்டின் 8 சதவீதத்திற்கும் 55 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

#### (ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இல. 30501 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் 2012 மார்ச் 22 ஆம் திகதி வேலை நீக்கத்திற்கு உட்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 137,120 தொகையான சம்பளக் கடன் முற்பணங்கள் 2012 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 4.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய

பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டுத்திட்டம் திணைக்களத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.2 வருடாந்த செயற்திறன் அறிக்கை

மேற்குறித்த 4.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க வருடாந்த செயற்திறன் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயற்திறன் அறிக்கை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டிற்காக திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1.2 மில்லியன் தொகையான மூலதன ஏற்பாட்டிற்காக மாத்திரம் போதிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறித்த 4.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயற்திறன் அறிக்கை 2013 யூலை 30 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

திணைக்கள வாகனம் பழுதடைந்திருந்தமையால் 2012 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| | சொத்து வகை | சொத்து எண்ணிக்கை/ அலகுகளின் எண்ணிக்கை/ அளவு | சொத்துக்களை வழங்கிய நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (i) | கட்டிடம் | 02 | • இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை | கணிப்பிடப்பட வில்லை |
| | | 01 | • தென் இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை - மொனறாகலையில் உள்ள சுற்றுலா விடுதி | மேற்படி - |
| (ii) | வாகனம் | 01 | • இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை | 188,233 |

**(இ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் திணைக்களத்தின் செலவில் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**4.6 செயலாற்றல்**

06 அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் மலையக சிறுபயிர்ச்செய்கை புனரமைப்புத் திணைக்களம தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய எச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 17,340,000 தொகையான ஏற்பாட்டில் ரூபா 16,115,000 தொகை அதாவது 93.5 சதவீதம் தனியாள் சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாகச் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தன.

**4.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான எண்ணிக்கையும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 | -- |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | -- | 01 | -- |
| (iii) | இரண்டாம் நிலை | 37 | 19 | 18 | -- |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 07 | 04 | -- |
| (v) | ஏனையவை (அமையம்/தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | -- | 01 | -- | 01 |
| | மொத்தம் | 55 | 31 | 25 | 01 |

## 5. தலைப்பு – 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 04 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள், இங்கே பந்திகள் (அ) இல் இருந்து (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் பின்வரும் 5.4 முதல் 5.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்

மூலதனச் செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்கு உரிய தேறிய ஏற்பாட்டின் 23 சதவீதமாகக் காணப்பட்டது.

### (ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இல. 32201 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக் 2012 திசெம்பர் 31 ஆம் திகதிய இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 200,675 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடத் தவறியிருந்தது.

## 5.4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க

அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 01 ஆம் திகதியில் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தல்**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

மிரிச்சவில உலர் வலய தாவரவியல் பூங்காவில் 12 ஹெக்டெயர் காணி 03 ஆண்டுகளுக்கும் மேலான காலமாகப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நாடாத்தல்**

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப் /மெய்மையாய்வு/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச்

சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொண்டு அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு உரித்தான 5 பிரிவுகளுக்கு உரித்தான அவ் அறிக்கை 2013 மே 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள்**

ஹக்கல தாவரவியற் பூங்காவிற்கு உரித்தான 20 ஹெக்டேயருக்கு அதிகமான காணி வெளித்தரப்பினரால் அத்துமீறி கைப்பற்றப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு அத்துமீறிக் கைப்பற்றப்பட்ட மொத்தக் காணியின் அளவு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அவிசாவளை ஈர வலய தாவரவியல் பூங்காவில் 2012 திசெம்பர் 15 ஆம் திகதியில் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நுழைவுக் கட்டிடம், விருந்தினர் மண்டபம், மலசலகூட முறைமை மற்றும் ஏனைய உள்ளக நிர்மாணிப்புகள் என்பன கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 17 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பஹா தாவரவியல் பூங்காவின் 2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 3,995,000 தொகையான 02 செயற்பாடுகள் 2013 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பஹா தாவரவியல் பூங்காவின் கம்பஹா – ஜாஎல வீதியூடாக பூங்காவை வந்தடைவதற்காக அத்தனகலு ஒய ஊடாக ஓர் பாலத்தை

நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் இது நிர்மாணிக்கப்பட்டிராததுடன் இதன் காரணமாக 2013 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய நுழைவாயிலும் நுழைவுச்சீட்டுக் கூடமும் பயன்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) மிரிஜ்ஜவில உலர் வலயத்தின் தாவரவியல் பூங்காவில் ரூபா 4,072,667 ஒப்பந்தப் பெறுமதியுடைய 04 கூடங்களின் நிர்மாண வேலைகள் 2012 யூன் 28 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 சனவரி 22 ஆம் திகதி வரையிலும் அந் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மிரிஜ்ஜவில உலர் வலயத்தின் தாவரவியல் பூங்காவின் அரைவட்ட நிழற் கூடார நிர்மாணிப்பிற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1,254,590 தொகையும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 64,280 தொகையுமாக ரூபா 1,318,870 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 28 ஆம் திகதி வரையில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய நிழற் கூடார நிர்மாணிப்புகள் 2013 சனவரி 22 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் நிழற் கூடாரத்தின் வெளிக் கூடு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு வேலை கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.7 வங்கிக் கணக்குகளைப் பேணுதலிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 01 வருடத்திற்கு மேலான 03 வருடங்களுக்குக் குறைவான காலமாக நிலவி வரும் வேறு சீராக்கங்களின் பெறுமதி ரூபா 131,159 ஆகக் காணப்பட்டது.

## 5.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ஹக்கல தாவரவியல் பூங்காவிற்கு உரித்தான ஓர் கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வரும் ஓர் சிற்றுண்டிச்சாலைக்காக 2007 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2013 யூலை 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக பெறப்பட்டிருந்த வரி

வருமானம் ரூபா 1,053,900 அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது தாவரவியல் பூங்காவின் ஊழியர் நலனோம்பல் சங்கத்தின் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 5.9 முகாமைத்துவ நலிவுகள்

ஹக்கல தாவரவியல் பூங்காவின் அலுவலகக் கட்டிடம், ஊழியர் வீடுகள், பொது மலசலகூடம், களஞ்சியம், நுழைவுச் சீட்டு கூடம் மற்றும் பாதுகாப்பு கூடாரம் உள்ளடங்கலாக பல்வேறு பகுதிகளில் திருத்த வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் பதவியணியினர் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 16 | 17 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 05 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 145 | 101 | 44 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 516 | 423 | 93 | - |
| (v) | ஏனைய (ஒப்பந்த ஊழியர்) | - | 116 | - | 116 |
| | மொத்தம் | 700 | 661 | 155 | 116 |

அவிசாவளை ஈர வலய தாவரவியல் பூங்காவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்று இல்லாததுடன் ஈடுபடுத்தப்பட்ட பதவியணி பூங்கா நடவடிக்கைகளை முறைப்படி நடாத்திச் செல்வதற்கு போதாதிருந்தனர்.